D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.90/2021
**P.W**. 5(LW14)

Name : திரு.அய்யனாரப்பன்
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் இதற்கு முன்பு திருவள்ளூர் ஆரம்பாக்கம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது திண்டிவனத்தில் குடியிருந்து வருகிறேன்.

2. கடந்த 26.06.2018ம் தேதி திருக்கழுக்குன்றம் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்த போது சட்ராஸ் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ராமானுஜம் என்பவரிடம் மாணிக்கம் என்பவர் நிலையம் ஆஜராகி புகார் கொடுத்ததை நிலைய குற்ற எண்.171/2018 இ.த.ச.பிரிவுகள் 279, 337 ல் வழக்கு பதிவு செய்திருந்தார். **(முதல் தகவல் அறிக்கைஅ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன)**

3. பின் அவர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெயகர், நாகமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு சாட்சிகள் மாணிக்கம், சாந்தகுமார், வேலு, சீனிவாசன் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான ஜெயகர், நாகமுத்து ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

4. இவ்வழக்கில் காயம்பட்ட ஜெகதா என்பவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த மருத்துவர் சதீஷ்ராஜன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றிருந்தார். **(காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ஜெகதா என்பவரை மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சை பலனில்லாமல் 28.06.2018 அன்று அதிகாலை 2.45 மணியளவில் இறந்துவிட்டதாக வரப்பெற்ற தகவலின் பேரில் வழக்கின் சட்டப்பிரிவு 279, 337 இ.த.ச. விலிருந்து 279, 304(A) இ.த.ச. படி பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தார். **(சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5 பின்னர் வழக்கு கோப்பினை என் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கில் இறந்துபோன ஜெகதா என்பவரின் பிரேதத்தின் மீது ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் கன்னியப்பன், கனகராஜ் ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. இவ்வழக்கின் எதிரியான சண்முகம் என்பவரை கடந்த 09.07.2018ம் தேதி 16.00 மணியளவில் நிலையம் ஆஜரானவரை கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன்.

7. இவ்வழக்கில் இறந்துபோன ஜெகதா என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.ஜெயக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றேன். **(பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

7. இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 05 AM 7435 TATA ACE வாகனத்தை ஆய்வுக்குட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சோமசுந்தரம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கையை பெற்றேன். **(ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**8.** இத்துடன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(ஏ) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>

இந்த வழக்கின் புகார்தாரர் கடலூர் கிராமத்தை சேர்ந்தவர். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் இ சி ஆர் சாலை TKV திருமண மண்டபம் அருகே நடந்தது. விபத்து நடந்த இடத்திற்கும் புகார்தாரரின் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 12 கி.மீ. தூரம் இருக்கும். வழக்கின் சாட்சியான சீனிவாசன் என்பவரும் புகார்தாரரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். புகார்தாரரின் ஊரை சேர்ந்தவர் என்பதால் சீனிவாசன் புகார்தாரரை செல்போன் எண்ணை தனது மொபைல் போனில் பதிவு செய்து வைத்திருக்கலாம் என்றால் சரிதான். பொதுவாக புகாரில் குறிப்பிட்டுள்ள விவரங்களை பொறுத்து தான் சட்டப்பிரிவுகள் கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் அதே போல் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் கொடுத்த தேதி 26.06.2018 ஆகும். அன்றைய தினமே

வழக்கு பதிவு செய்யப்பட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 24.06.2018 ஆகும். சம்பவம் நடந்து 2 நாட்கள் தாமதமாக புகார் கொடுத்தற்கான காரணத்தை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சி சீனிவாசனை எந்த தேதியில் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் 27.06.2018 அன்று காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். புகாரில் விபத்து ஏற்படுத்திய வாகனம் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனம் ஓட்டி வந்து விபத்து ஏற்பட்டது என்று புகார் கொடுக்காத போது எவ்வாறு 279, 337 இ.த.ச வில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் வாகனம் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தால் தான் இ.த.ச. பிரிவு 279, 337 ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்பது விதி அல்ல. சாலை விபத்து ஏற்பட்டால் 279, 337 இ.த.ச. வின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படும். விபத்தில் இறந்த நபருக்கு இழப்பீடு தொகை கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் எதிரியை இந்த வழக்கில் குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கின் சாட்சிகள் அனைவரையும் காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரணை செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.